# இலண்டன் மேயர் மற்றும் இலண்டன் அவைத் தேர்தல்கள்

வியாழக்கிழமை

5 மே 2016

## வாக்களிப்புக்கு உங்கள் வழிகாட்டி

மே மாதம் 5ஆம் திகதி வியாழக்கிழமை அன்று இலண்டன் வாழ் மக்கள் இலண்டன் மேயரையும் இலண்டன் அவையின் 25 உறுப்பினர்களையும் தெரிவு செய்ய வாக்களிக்கலாம். மேயரும் அவையும் இலண்டனில் உங்கள் நாளாந்த வாழ்க்கைக்குரிய, வீடமைப்பு வசதி, போக்குவரத்து, சூழல், காவல்துறை உள்ளிட்ட பல நிலைகளுக்குப் பொறுப்பாக உள்ளனர்.

### 1 இலண்டன் மேயர் (இளஞ்சிவப்பு வாக்குச் சீட்டு)

- மேயர் தேர்தலில் உங்களுக்கு 2 தெரிவுகள் உள்ளன.
- கலம் A இல் நீங்கள் முதலாவதாகத் தெரிவு செய்பவருக்கு ஒரு தடவை வாக்களிக்கவும் [X].
- கலம் B இல் நீங்கள் இரண்டாவதாகத் தெரிவு செய்பவருக்கு ஒரு தடவை வாக்களிக்கவும் [X].



### 2 இலண்டன் அவையின் தொகுதி உறுப்பினர் (மஞ்சள் வாக்குச் சீட்டு)

- இலண்டன் அவையில் உங்கள் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்த நீங்கள் விரும்புபவரைத் தெரிவு செய்யவும்.
- நீங்கள் தெரிவு செய்பவருக்கு நேராக [X] என்று குறியிட்டு ஒரு வேட்பாளருக்கு மட்டும் வாக்களிக்கவும்.



### 3 பரந்த-இலண்டன் அவையின் உறுப்பினர் (ஆரஞ்சு நிற வாக்குச் சீட்டு)

- இலண்டன் அவையில் முழு இலண்டனையும் பிரதிநிதித்துவப்படுத்த நீங்கள் விரும்புபவரைத் தெரிவு செய்யவும்.
- நீங்கள் தெரிவு செய்பவருக்கு நேராக உள்ள பெட்டியில் [X] என்று குறியிட்டு ஒரு தடவை மட்டும் வாக்களிக்கவும்.



நீங்கள் 2016 மே 5 அன்று 18 வயதுடையவராக அல்லது அதற்கு மேற்பட்டவராக இருந்து பிரித்தானிய, ஐரோப்பிய யூனியன் அல்லது தகுதியுடைய பொதுநலவாயப் பிரஜையாக இலண்டனில் வாழ்பவராக, 2016 ஏப்ரல் 18 அளவில் gov.uk/register-to-vote எனும் இணையத்தளத்தில் வாக்களிப்புக்குப் பதிவு செய்தவராக இருப்பீர்களானால், உங்களால் வாக்களிக்கமுடியும.

**londonelects.org.uk**

@LondonElects

LONDON ELECTS

YOUR LONDON. YOUR VOTE